# இலங்கை அரசாட்சி "கெஸெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,900 — 1942 ம் ஞூ சித்திரைமீ 2 ந் திகதி, வியாழக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரம்.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பசறையிலே எலிபோகாத் தானியம் சேகரிக்கும் கட்டிடம் கட்டல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னாகச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—,

பிரதமப்படத்து இல. 39, சோப்பு 1. குறிச்சி—கணகெல

| துண்டு | காணியினது பெயர் | விபரம். | உரித்தாளியின் பெயர் | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 95 | தென்னஹேன்வத்தை, 83B ம் வரி இலக்கம் கொண்ட காணியின் பாகம் | வெட்டை நிலம் | ஆர் ரெங்கசாமியும் ஆர் பெருமாளும் | 0 0 1·61 |
| 96 | ஷெ | ஷெ | ஷெ | 0 0 0 37 |
| 97 | ஷெ | 30 வயது தொடங்கி 40 வயது வரையிலுள்ள 1 பலாமரமும் 1 பப்பாமரமும் கொண்ட தோட்டம் | ஏ எஸ் அப்துல் மூமின்கான் | 0 0 21·46 |
| 98 | ஷெ | வெட்டை நிலம் | ஷெ | 0 0 3 90 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிப்படுத்திக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1942 ம் ஞூ (ஏப்பிறல்) சித்திரை மாசம் 28 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு பசற கிராமக் கோட்டில் என்முன்பாக வெளிப்படுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1942 ம் ஞூ (பெப்றுவரி) மாசிமீ 24 ந் உ.

ஜே. ஆர் வோல்டாஸ்,
அரசாட்சி ஏசண்டு, ஊவா.

---

### சுப்பிறீங் கோட்டு அறிவித்தல்.

இலங்கைத் தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது காலி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் தென் மாகாண டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினல் வழக்கு விசாரணை, 1942 ம் ஆண்டு ஏப்றல் மாதம் 27 ந் திகதியாகிய திங்கட் கிழமை காலமே 10 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும். ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

டபிளியு ஓ ஸ்றீவன்ஸ்,
தென் மாகாண பிஸ்கால்

பிஸ்கால் கந்தோர்,
1942 ம் ஆண்டு மாசிமீ 26 ந் உ.

---

### உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்கள்.

களுத்துறை டிஸ்திறிக், களுத்துறைத் துறைமுகம், களுத்துறை பத்தைதுவேகமயில் வசிக்கும் பொன்ரகம்கே ஏரன் ஐசாக் டி சில்வா ஜயதிலக்க ஆகிய நான் குருணாகலை டிஸ்திறிக்கில் சிங்கள பாஷையில் பிரசித்த நொத்தாரிசாக வேலைபார்ப்பதற்கு மூன்று மாசங்களின் பின்னர் பதிவுகாரியஸ்தத் தலைவருக்கு விண்ணப்பஞ்செய்வேனென்று இத்தால் இலங்கை அரசாட்சியாரின் 1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கச் சட்டத்தின் 1 B அட்டவணையின் 2 ம் ஒழுக்கவிதிப்படி அறிவிக்கப்பண்ணுகிறேன்.

ஏ டீ. எஸ். ஜயதிலக்க.

துவேகம, களுத்துறை,
1942 ம் ஆண்டு பங்குனிமீ 10 ந் உ.

---

நீர்கொழும்பு டிஸ்திரிக்கைச்சேர்ந்த தாசியபத்துவ ஈனட்டியன கிராமத்தில் வசிக்கும், தினயாதுர அலிஸ் சில்வா விஜயசிங்ஙு ஆகிய நான் (அத்தியாயம் 91) கட்டளைச் சட்டப்படி முதலாம் நாம வரியில் பிரிவு B 2 ம் பிரமாணத்தின்படி இன்று முதல் 3 மாதத்திற்குப்பின் கொழும்பு டிஸ்திரிக்கில் சிங்களப் பாஷையில் நொத்தாரிஸ் கடமைபண்ணச் சேருவதற்கு என்னை நியமிக்கும்படி அரசினர் பதிவு கந்தோர் தலைவரிடம் கேட்டுக் கொள்கிறேன்.

தி. அ. சி. விஜயசிங்ஙு.

ஈனட்டியன, கட்டுநாயக்க,
1942 ம் ஆண்டு பங்குனிமீ 6 ந் திகதி.

---


PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.

35——J. N A 12124—45 (3/42)
T 1